மாண்புமிகு திரு. சு. திருநாவுக்கரசு: ஏற்கெனவே திருப்பத்தூரில் தமிழ் நாடு தொழில் வளர்ச்சி நிறுவனம், டிட்கோ-வும் திரு. தியாகராஜன் என்பவரும் சேர்ந்து ஆரம்பிப்பதாக இருந்தது. அதற்கான நிதி ஒதுக்கீடு எல்லாம் செய்யப்பட்டது. அதற்குப் பின்னாலே கூட்டுறவுத் துறையில் தொடங்க இருந்ததால், இந்தத் திட்டம் நிறுத்தப்பட்டது. அதற்குப் பின்னால் தனியாக ஆரம்பிப்பதற்கு மனுக்கள் வந்ததாகவும் அரசே ஆரம்பிக்க இருப்பதாலே நிராகரிக்கப்பட்டிருக்கிறது என்பதாகவும் சொன்னார்கள். அதுபோன்ற தகவல் எதுவும் இல்லை. அப்படி யாராவது தனியார்கள் தொடங்கினால், இந்த அரசு தேவையான உதவிகளைச் செய்யும்.

ஆதி திராவிடர்கள் முறையீடு.

@ *48 வினா.—திரு. ம. சங்கரலிங்கம்: மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டு கிறேன்—

(அ) கன்னியாகுமரி மாவட்டம், நாகர்கோவில் இருப்புப்பாதை தலைமை நிலையம் ஏற்படும் இடத்திற்கு பக்கத்தில் வாழ்கின்ற ஆதிதிராவிட மக்கள் கோட்டாறு-கருப்புக்கோட்டை சாலை அடைபடுவதினால் அவர் களுக்கு ஏற்படும் இன்னல்களைத் தெரிவித்து, அரசுக்கு முறையீடு செய்துள்ளனர் என்பது உண்மையா ?

(இ) ஆம் எனில், அதன் மீது அரசு எடுத்த நடவடிக்கை யாது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி: (அ) இல்லை.

(இ) இந்தக் கேள்விக்கு இடமில்லை.

திரு. ம. சங்கரலிங்கம்: தலைவர் அவர்களே, திருவனந்தபுரம்-திருநெல் வேலி-கன்னியாகுமரி ரயில்வே இணைப்புச் சாலையுடன் கோட்டாறு-கருப்புக் கோட்டை ரோடு கரியமாணிக்கபுரம் பஞ்சாயத்துக்கள் உட்பட்ட கிராமங் களில் நாகர்கோவிலிலிருந்து கருப்புக்கோட்டைக்குப் போகிற, ஆதி திராவிடர்கள் கிராமத்திற்குப் போகின்ற பாதை அடைக்கப்பட்டுவிட்டது. இதற்காக அப்பகுதி மக்களால் மனுக்கள் தயார் செய்யப்பட்டு அரசினிடத்திலே கொடுக்கப்பட்டிருக்கின்றன. மாவட்ட வளர்ச்சி மன்றக் கூட்டங்களிலும் எடுத்துச் சொல்லப்பட்டு, அதற்கு மாற்று ஏற்பாடு செய்து தருவதாகச் சொன்னார்கள். அதற்காக என்று அங்கேயுள்ள மக்களும் மனுக்களை அனுப்பி யிருக்கிறார்கள். இப்போது அமைச்சர் அவர்கள் தகவல் இல்லை என்று சொல்வதனால், தலைவர் அவர்களின் அனுமதியோடு, மாண்புமிகு அமைச்சர் அவர்களிடம் இந்த வேண்டுகோளைக் கொடுக்கிறேன். இனிமேலாவது தக்க நடவடிக்கை எடுக்கப்படுமா ?

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப் பட்டது.

1981 பிப்ரவரி 26]

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : வெட்டூர்ணி மடம் ஆதி திராவிடர்களும், கரியமாணிக்கபுரம் தலைவர் அவர்களும் அங்கு ரெயில்வே நிலையம் அமைக்கப்படுவதால், கோட்டாறு-கருப்புக்கோட்டை சாலை பாதிக்கப்படுகிறது என்றும் வேறு ஒரு பாதையை அமைக்க வேண்டுமென்றும் கன்னியாகுமரி மாவட்ட ஆட்சியாளர் அவர்கள் மூலம் கோரியுள்ளனர் என்றும் தெரிகிறது. முதலில் ஆர்.எஸ். எண் 76, 77, 80 மற்றும் 83 மூலமாக சாலை அமைக்கும் கருத்து இருந்தது. ஆனால், அந்த சர்வே நிலங்கள் அந்த ரெயில்வே பகுதியைச் சேர்ந்திருக்கிறது. சுசீந்திரம் கால்வாய் கிழக்கே ஆர்.எஸ். 28 என்ற நிலத்தின் குறுக்கே கட்டப்பட்டுள்ள பாதையில் இருந்து, பாலத்திலிருந்து தொடங்கி ஆர்.எஸ். சர்வே எண் 27-7, 22-6, 22-2, 23-8, 19-1 ஏ, 19-2 பி, 17-1 ஏ மற்றும் 17-1 பி என்ற நிலங்கள் ரெயில் நிலையத்தின் வடக்குப் பக்கம் இருப்புப் பாதையைத் தாண்டி நடைபாதை அமைக்க உத்தேசிக்கப்பட்டுள்ளது என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அதற்காக தேவையான நிலத்தை ஆர்ஜிதம் செய்ய நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன. பிறகு, நன்செய் நிலங்களை ஆர்ஜிதம் செய்ய அரசுக்கு முன் அனுமதி பெறவும் தக்க நடவடிக்கைகள் எடுக்கப்பட்டு வருகின்றன. நிலங்களைக் கையகப்படுத்தியவுடன் சாலைகள் விரைவில் அமைக்கப்படும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

திரு. ம. சங்கரலிங்கம் : தலைவர் அவர்களே, ரயில்வே நிலையம் கட்டுவதற்கு முன்னே இந்த கோட்டாறு, கருப்புக்கோட்டை ஆதி திராவிட மக்கள் நாகர்கோவிலுக்கு மருத்துவ வசதி, கல்வி வசதி மற்ற வசதிகளைப் பெறுவதற்கு இரண்டு பர்லாங் தூரம்தான் வந்துகொண்டிருந்தார்கள். இந்த ரெயில்வே நிலையம் அமைக்கப்பட்ட பிறகு அமைச்சர் அவர்கள் சொல்கின்ற மாற்று வழிப்படி அவர்கள் வர வேண்டுமென்றால், நான்கு அல்லது ஐந்து மைல்கள் சுற்றி வருகின்ற மாதிரிதான் அமையும். ரெயில்வே நிலங்களை ஒட்டியே நஞ்சை நிலங்களை ஆர்ஜிதம் செய்து புது ரோடு போட்டால், நான்கு பர்லாங்கில் அவர்கள் வர முடியும். ரெயில்வே நிலத்தைக் கையகப்படுத்துவதைவிட அந்த இடத்திற்கு அப்பாற்பட்ட இடங்களை எடுக்க அரசு முயற்சி செய்ய வேண்டும். அப்படி முயற்சி செய்யுமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : தலைவர் அவர்களே, நஞ்சை நிலங்களை வீட்டு வசதி வாரியம்கூட எடுத்து, அந்த இடத்திலே வீடுகள் அமைப்பது என்பது கூடாது என்ற கொள்கையை இந்த அரசு கொண்டிருக்கிறது. ஆகவே அந்த வகையில், இருக்கின்ற நஞ்சை நிலங்களை எடுத்துப் பாழாக்காமல் எந்த அளவில் உதவி செய்ய முடியுமோ அதைச் செய்யும்.

திரு. ம. சங்கரலிங்கம் : கன்னியாகுமரி மாவட்டத்தில நஞ்சை நிலங்களைத் தவிர வேறு நிலங்களே கிடையாது. எல்லாப் பகுதிகளிலும் நஞ்சை நிலம்தான் இருக்கின்றது. சிறிதளவு நிலம் ரோட்டுக்காக எடுக்கப்பட்டாலும், மற்ற பகுதிகளிலேயிருந்து அந்த விளைவுகளை எடுத்து ஈடுகட்டிக்கொள்ள முடியும். எனவே மக்கள் போக்குவரத்திற்காக, மக்களின் வசதிக்காக அரசினுடைய அந்தக் கொள்கையிலிருந்து, மொத்த மாநில அளவில் வைத்திருக்கின்ற அந்தக் கொள்கையிலிருந்து விலகி, அந்தப் பகுதியிலே இந்தத் திட்டத்தை வகுக்க அரசு முன்வருமா என்பதை அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : விதி விலக்கு அளிப்பது என்பது முறைதான். ஆனால், இதற்கு அந்த விதிவிலக்கு அளிக்க வேண்டுமா என்பதைப்பற்றி அரசு சிந்திக்கும்.

திரு. ஜி. சுவாமிநாதன் : தலைவர் அவர்களே, இந்தத் துறையினுடைய அமைச்சர் அவர்களை பல ஆண்டுகளாக அரிஜன நலத் துறை அமைச்சர் என்றுதான் சொல்லி வந்தார்கள். இப்போது ஆதி திராவிடர் அமைச்சர் என்று ஏன் மாறுதல் பெற்றிருக்கிறது என்று அறிய விரும்புகிறேன். அப்படியென்றால் திராவிடர் யார் ? ஆதி திராவிடர் யார் ?

மாண்புமிகு திரு. எம். ஜி. இராமச்சந்திரன் : ஆதி திராவிடர்—திராவிடர் என்பதற்கு வித்தியாசம் தெரியாமல் இருக்காது. மாண்புமிகு உறுப்பினர் அவர்களுக்குத் தெரியும். என்னை ஆதி திராவிடர் ஆக்கிக்கொள்வது என்றாலும், நான் கவலைப்படவில்லை.

எஸ்.எம்.ஆர்.வி. அரசு நெசவு பயிலகம்.

@ * 49 வினா.—திரு. ம. சங்கரலிங்கம் : மாண்புமிகு ஆதி திராவிடர் நலத் துறை அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினாக்களுக்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

(அ) 1980-81 கல்வி ஆண்டில், நாகர்கோவிலிலுள்ள எஸ்.எம்.ஆர்.வி அரசு நெசவு பயிலகத்தை, உற்பத்தி மையமாக மாற்றும் செயற்குறிப்பு ஏதேனும் அரசுக்கு உள்ளதா ?

(இ) ஆம் எனில், அது தற்பொழுது எந்நிலையில் உள்ளது ?

மாண்புமிகு திரு. எம். விஜயசாரதி : (அ) இல்லை.

(இ) இவ்வினாவுக்கு இடமில்லை.

@ 29—1—1981 ஆம் நாள் வினாப்பட்டியலிலிருந்து ஒத்தி வைக்கப்பட்டது.